வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 256/2021

வழக்கு சாட்சி PW1

| பெயர் | சோனை முத்து,<br>சிறப்பு உதவி ஆய்வாளர்,<br>M1 மாதவரம். | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | சோனை | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 52 |

தேதி 28.10.2024

எதிரி ஆஜர்

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது எம்.1 மாதவரத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 20.09.2019 புழல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வந்தேன். நான் அன்றைய தினம் இரவு ரோந்து பணியில் இருந்தபோது இரவு 8.00 மணியளவில் காவல் நிலையத்திலிருந்து நிலைய பொருப்பு பாரா காவலர் ஜானகிராமன் போன் செய்தார். நேரு தெருவில் முத்து என்பவர் போன் செய்து பக்கத்து வீட்டுக்காரார் திட்டுவதாகவும், அந்த புகாரினை சென்று பார்க்கும் மாறும் என்னை கூறினார். நான் சம்பவ இடம் சென்று முத்து யார் என்று கேட்டேன் அவர் நான்தான் என கூறி வணக்கம் வைத்தார். நானும் வண்க்கம் வைத்தேன். நான் என்ன பிரச்சனை என்று கேட்டேன். சினிமா போலீஸ் மாதிரி நான் மறுபடியும் போட்டு காட்ட வேண்டுமா என குதர்கமாக பேசினார். நான் எஸ்.ஐதானே வரசொன்னேன். நீ என்ன ஏட்டு வந்திருக்கிறாய் என கேட்டார். உனது பெயர் என்ன பெயர் தெரியவில்லை என எனது சட்டையில் இருந்த பெயர் பேட்சை பேக்கெட்டுடன் சேர்த்து இழுத்து விட்டார். நான் போன் செய்ததற்கு உதவி செய்ய வந்துள்ளேன் என கூறியதற்கு என்னை அசிங்கமாக கூத்தா என்னை கெட்ட வார்த்தையால் திட்டினார். என்னை அடிக்கமுற்பட்டார். அவரது வலது காலால் எனது இடது காலை எட்டி

உதைத்தார். நான் நிலைகுலைத்து கீழே விழுந்துவிட்டேன். எனது கைப்பேசியை எனது நிலையத்தை அனுகி உதவி கேட்டேன். அருகில் இருந்த பொது மக்களை உதவிக்கு அழைத்தபோது அவன் மோசமானவன். ஏன் சார் நீங்க வந்தீர்கள் என கேட்டார்கள். அப்போது உள்ளே சென்ற எதிரி வீட்டில் இருந்த கத்தி எடுத்து வந்து நீ தெருவில் வந்தால் குத்தாமல் விடமாட்டேன் என கூறினார். நான் பயத்தில் மீண்டும் போலீஸ்க்கு போன் செய்து ரோந்து பணியில் இருந்த இரண்டு போலீசார்களை வரவழைத்தேன். எதிரியை அவர்கள் பிடித்து காவல் நிலையம் அழைத்து சென்றார்கள். நான் புகார் அளித்தேன். அவரது பெயர் முத்து (எ) தக்காளி முத்து. ஆஜர் எதிரிதான் அவர். மேற்படி புகாரானது அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை உதவி ஆய்வாளர் மனோகர் அவர்கள் விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

சம்பவம் எந்த தேதி, நேரம் என்னவென்றால் 20.09,.019 இரவு 8.00 மணியளவில். அன்றைக்கு எனக்கு என்ன பணி என்றால் ரோந்து பணி. 13.00 மணி முதல் இரவு 21.00 மணி வரை. புகார் யார் கொடுத்தார்கள் என கூறினார்களா என்றால் முத்து என்பவர் பக்கத்து வீட்டுக்காரர் திட்டுவதாக கூறுவதாக கூறினார். நான் ரோந்து பணிக்கு எதில் சென்றேன் என்றால் நான் அன்றையதினம் ரோந்து பணியில் இருந்தேன் என்பதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சம்பவ இடம் பூர்வீகமாக வசிக்கும் மக்கள் உள்ள இடம் என்றால் ஆமாம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.எல்., புகாரினை யார் எழுதினது என்றால் நான்தான் எழுதினேன். நான் எனது புகாரில் எந்த வாகனத்தில் சென்றேன் என்று கூறியுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. ரோந்து பணிக்கு ஜிப்ஸி வாகனத்தில் இரண்டு நபர்கள் செல்வோம் என்றால் ஆமாம். நான் புகார் அளித்ததின்பேரில் யார் எதிரியை பிரச்சனை செய்தார்கள் என விசாரணை செய்தேனா என்றால் செய்தேன். யாரும் பிரச்சனை செய்யவில்லை. எதிரிதான் பிரச்சனை செய்துகொண்டு இருந்தார். அதனை நான் எனது புகாரில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் ஜிப்ஸியில் போனது உண்மையா, இருசக்கர வாகனத்தில் போனேனா என்றால் ஜிப்ஸி பழுதானதால் இருசக்கர வாகனத்தில் சென்றேன். ஜிப்ஸி பழுதானதை புகாரில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் இருசக்கர வாகனத்தில் அமர்ந்து கொண்டே எதிரியை அழைத்து நீதான் தொந்தரவு கொடுக்கிறாய் என கண்ணத்தில் அறைந்தேன் என்றால் இல்லை. எதிரி, புகார் கொடுத்த என்னையை அழைத்து, ஏன் அடிக்கிறீர்கள் என சட்டையை பிடித்து தள்ளிதான் விட்டார் என்றால் சரியல்ல. நான் அதனால் பைக்கிள் இருந்து தவறி கீழே விழுந்தேன் என்றால் சரியல்ல. நான் தவறி கீழே விழுந்ததால்தான் சிராய்பு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் லேசாக தள்ளிவிட்டதில் காயம் ஏற்பட்டதினை மனதில் வைத்துக்கொண்டு எதிரி என்னை அசிங்கமாக

பேசி அடித்து, ஆயுதங்களை காட்டி மிரட்டியதாக ஜோடனையாக, பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகாரினை யாரிடம் கொடுத்தேன் என்றால் உதவி ஆய்வாளர் மனோகரிடம். நான் அளித்த புகாரினை ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் ஆமாம். நான் உதவி ஆய்வாளரிடம்தான் புகார் அளித்தேன் என்றால் ஆமாம். ஆய்வாளருக்கும் தெரியும். அவரும் விசாரித்தார். நான் கூறுமாறு சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் சிறிய சம்பவத்தை மிகைபடுத்தி கூறினேன் என்றால் சரியல்ல. நான் கூறியுள்ளவாறு சம்பவ நடைபெறவில்லை என்றாலும் பொய் புகார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**